**சுருக்கம்**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் – நெசப்பாக்கத்தில் கூடுதலாக 54 mld கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (பகுதி–II) - ரூ.54.57 கோடி மதிப்பில் கட்டுவதற்காக நிர்வாக அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

– - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (சென்னைக் குடிநீர்) துறை**

அரசாணை (நிலை) எண்.171 நாள்:23.09.2009

படிக்கப்பட்டது:

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநரின் கடித எண்.CMWSSB/STP/JNNURM/Nesa/Phase-II/2009, dt.17.3.2009.

- - - -

**ஆணை:**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் கூடுதலாகக் கட்டப்படவுள்ள 54 mld கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்காக(பகுதி–II),JNNURM திட்டத்தின் கீழ் ரூ.54.57 கோடி அனுமதிக்கப்பட்டதாகவும், மேற்படி பணிக்காக ரூ.58.87 கோடிக்கு நிர்வாக அனுமதி வேண்டி வாரியத் தீர்மானம் எண்.13/2009, நாள்.7.2.2009–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலும் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமது 03.02.2009 நாளிட்ட கடிதத்தில் திட்டத்தின் நிர்வாக ஒப்புதலுக்காக தீர்மானம் நிறைவேற்றி வரையறுக்கப்பட்ட படிவத்தில் திட்டத்தின் அனுமதிக்காக அனுப்பும்படியும், இதனையடுத்து நாள்.21.02.2009–ல் நடைபெற்ற 299வது வாரியக் கூட்டத்தில் தீர்மானம் எண்.56/2009ல் வாரியத்தீர்மானம் வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிறைவேற்றப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி கழகத்துக்கு அனுப்பப்பட்டதாகவும், மேலும் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமது 27.2.2009 நாளிட்ட கடிதத்தில் அரசாணை (நிலை) எண்.85, ந.நி.(ம)கு.வ.துறை நாள்.15.6.2007–ன்படி ரூ.25.00 கோடி தொகைக்கு மேலே உள்ள திட்டத்திற்கு அரசிடம் நிர்வாக அனுமதி பெற வேண்டுமென்பதால், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் அரசின் நிர்வாக அனுமதி கோரியுள்ளார்.

3. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர், நெசப்பாக்கத்தில் ரூ.58.87 கோடி மதிப்பில், 54 mld கொள்ளளவுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (பகுதி II) அமைப்பதற்காக நிர்வாக அனுமதியை வேண்டியுள்ளார். ஆனால் இத்திட்டத்திற்கு ரூ.54.57 கோடி செவினத்திற்கு மட்டுமே மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. JNNURM திட்டத்தின் கீழ் முதல் தவணையாக ரூ.682.64 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

4. மேற்கூறிய சூழ்நிலையில், அரசு கவனமுடன் பரிசீலித்து, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர், நெசப்பாக்கத்தில் கூடுதலாக 54 mld கொள்ளளவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு(Phase-II) மத்திய அரசு அனுமதி அளித்துள்ளவாறு இத்திட்டத்தினை ரூ.54.57 கோடி செலவினத்தில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.27165/MAWS/09-1, நாள்.27.5.09 அளிக்கப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி**
**அரசு செயலாளர்**

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், சென்னை–2.
மாநிலை கணக்காயர் (A&E), சென்னை–18.
மாநிலை கணக்காயர் (A&E), சென்னை–18. (பெயரில்)
மாநிலை கணக்காயர் (Audit-I), சென்னை–35.
மாநிலை கணக்காயர் (Audit-I), சென்னை–35. (பெயரில்)
மாநிலை கணக்காயர் (CAB), சென்னை–79.
உள்ளுறை தணிக்கை அலுவலர், தலைைச் செயலகம்,சென்னை–9.
சிறப்பு ஆணையர் மற்றும் கருவூலம் (ம) கணக்கு ஆணையர், சைதாப்பேட்டை, சென்னை–15.
<u>நகல்</u>
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
செயலாளரின் தனிச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
நிதி (பி.பி.இ) துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.–2 ) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்